**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.17/2020**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சரவணக்குமார்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **வைகைராஜ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(07.04.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது நாகமலைபுதுக்கோட்டை காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 17.10.2017ம் தேதி திருமங்கலம் மதுவிலக்கு அமல் பிரிவில் முதல் நிலை காவலராக பணியாற்றி வந்த போது அன்று காலை 10.30 மணியளவில் மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக நான் மற்றும் காவல் ஆய்வாளர் சொர்ணலதா, சிறப்பு சார்பு ஆய்வாளர் சிதம்பரம் ஆகியோர்கள் திண்டுக்கல் டு விருதுநகர் நான்கு வழிச்சாலை ரோடு உசிலம்பட்டி பிரிவு சாலை அருகே உள்ள ஜாய் ரெக்கரியேசன் கிளப் அருகில் ரோந்து செய்து வரும் போது அரசு நிர்ணத்த நேரத்திற்கு முன்பாகவே அந்த கிளப்பில் ஆட்கள் நடமாட்டம் இருப்பதை பார்த்து உள்ளே சென்று பார்த்தோம். அப்போது அங்கு கீழஉரப்பனுரை சார்ந்த குணா என்ற குணசேகரன் என்பவர் கையில் 180 ML SNJ No.1 பிராந்தி பாட்டில் 10 இருந்தது. அதில் ஒன்று திறந்து இருந்தது. அதில் 90 எம்.எல் பிராந்தியை ஒரு டம்ளரில் மற்றொருவருக்காக ஊத்தி வைத்திருந்தார். எங்களை பார்த்ததும் மேற்படி குணா தப்பிக்க பார்த்தார். நாங்கள் மேற்படி

நபரை பிடித்து விசாரிக்கும் போது மேற்படி நபர் மதுபான பாட்டில்களை விற்பனை செய்ய மணமகிழ் மன்றத்திற்குள் உள்ள அறையில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். பின்னர் நாங்கள் அந்த அறைக்கு சென்று பார்த்த போது அங்கு கப்பலுரை சார்ந்த 3 வது எதிரி முருகன், திருமங்கலம் மம்சாபுரத்தை சார்ந்த 4 வது எதிரி காசிமாயன் ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். அந்த அறையை பார்வையிட்ட போது 1292 பாட்டில்கள் இருந்தது. அதில் 180 எம்.எல், 650 எம்.எல் மற்றும் 370 ML அளவுள்ள பாட்டில்களும் பலதரப்பட்ட கம்பெனியை சார்ந்த பிராந்தி, ரம், பியர், ஒயின் ஆகியவை இருந்தது. மற்றும் விற்பனை செய்து வைத்திருந்த பணம் ரூ.2303/– பணமும் இருந்தது. பின்னர் நாங்கள் எதிரிகளை விசாரித்து இவ்வாறு வைத்திருப்பது குற்றம் என கூறினோம். ஏன் வைத்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு கிளப்பின் செக்கரட்டி விற்பனைக்காக வைத்திருப்பதாக வைத்திக் கொள்ள சொன்னதாக நாங்கள் வைத்திருந்தோம் என்று சொன்னார்கள். பின்பு நாங்கள் கைது செய்து தனிநபர்கள் சாட்சிகள் யாரும் இல்லாததால் ஜாரி செங்குளம் கிராம நிர்வாக அலுவலர் பாண்டியராஜன், தலையாரி முருகன் முன்னிலையில் காலை 11.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து 1292 பாட்டில்களையும், ரொக்க பணம் 2303/– ரூபாயையும் அத்தாட்சியில் கைப்பற்றினோம். பின்பு போலிஸ் சகிதம் எதிரிகளுடன் பாட்டில்கள் மற்றும் பணத்துடன் 11.45 மணிக்கு நிலையம் வந்து அவர்கள் மீது குற்ற எண். 1204/2017ன் கீழ் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். எதிரிகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். ஆனால் அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் மதுவிலக்கு பிரிவில் பணியில் சேர்ந்த காலத்திலேயே ஜாய் மணமகிழ் மன்றம் ஒன்று இருப்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். மதுபானக்கூடம் அந்த இடத்தில் தனியாக இருக்கிறது என்று சொன்னால் இல்லை. ஒன்றாக தான் உள்ளது. ஜாய் மணமகிழ் மன்றத்தில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 2 அறைகள் இருந்தது. அங்கு 4 அறைகள் இருந்ததாக சொன்னால் அது தவறு. 2 அறைகள் தான் உள்ளது. நான்

ஆய்வாளர் விசாரிக்கும் போது குறிப்பிட்டு நாங்கள் சென்ற நேரம் குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆய்வாளரும் எங்களுடன் வந்திருந்தார். நான் நேரம் குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் சட்டப்படி அனுமதித்த நேரத்தில் தான் நாங்கள் சட்டவிரோதமாக அந்த இடத்தில் சோதனை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் 3 எதிரிகளையும் அத்தாட்சி சாட்சிகள் வருவதற்கு முன்பாகவே பார்த்துவிட்டோம் என்றால் சரிதான். 3 எதிரிகளிடமும் பணம் இல்லை. ஆனால் கள்ளாபெட்டியில் இருந்தது. அது கிளப்பில் இருந்த கள்ளாபெட்டி ஆகும். குடிக்க வந்திருந்தவரை நாங்கள் பார்த்தோம். அவரை நாங்கள் பிடிக்க முயற்சி செய்யவில்லை. நாங்கள் போனவுடன் குடிக்க வந்தவர் போய்விட்டார். குடிக்க வந்தவரிடம் நாங்கள் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். அவரை விசாரித்திருந்தால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே மதுபானம் விற்பனை செய்ததை உறுதிபடுத்திருக்கலாம் என்றால் சரிதான். நாங்கள் மதுபானம் ஊத்தி கொடுத்தவரை துரத்தும் போது அவர் கிளப்புக்கு உள்ளேயே ஓடினார். அங்கு சம்பவயிடத்தில் நாங்கள் இருந்த போது ஆய்வாளரும் உடன் இருந்தார். ஆனால் குற்றம் நடந்த இடத்தில் அப்போது உள்ள பகுதிகளை காட்டுவதற்காக பார்வை மகசர் மற்றும் வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. கைப்பற்றப்பட்ட சா.பொ.1 பணத்தை ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த பணத்தை எந்த இடத்தில் இருந்து எடுத்தார் என்பது குறித்து ஆய்வாளர் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் பணத்தை எடுத்த பிறகு அத்தாட்சி தயார் செய்வதற்கு சாட்சிகளை தேடினார். எவரும் முன் வரவில்லை. எங்களையும் அவர் சாட்சியாக போடவில்லை. பணம் கைப்பற்றிய பிறகு கால்மணி நேரம் கழித்து கிராம நிர்வாக அலுவலர் வந்தார். அங்கு இருந்த மதுபான பாட்டில்கள் பாதி ரேக்குகளிலும் மீதி அட்டை பெட்டிகளிலும் வைக்கப்பட்டிருந்தது. ரேக்குகளில் இருந்த பாட்டில்களை அந்த அந்த மதுபானங்களை தனித்தனியாக பிரித்து தனித்தனி அட்டை பெட்டிகளில் நாங்கள் வைத்தோம் என்றால் சரிதான். அத்தாட்சி சாட்சிகள் வருவதற்கு முன்பாக ரேக்குகளில் இருந்த பாட்டில்களை நாங்கள் தரம் பிரித்து தனித்தனியாக அட்டைபெட்டிகளில் வைத்தோம். அவைகள் அனைத்தையும் ஒரு

இடத்திற்கு கொண்டு வந்தோம். இந்த பாட்டில்களை நாங்கள் அடுக்கிய பின்பு கால்மணி நேரம் கழித்து தான் அத்தாட்சிகள் வந்தார்கள் என்றால் சரிதான்.

தனியார் மதுபான கூடங்கள் காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரை இயங்குவதற்கு சட்டப்படி அனுமதி உண்டு என்றால் சரிதான். இரண்டு அத்தாட்சிகளிலும் நானோ அ.சா.1 சிதம்பரமோ கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பணம் தனியாகவும் பாட்டில் தனியாகவும் அத்தாட்சி தயார் செய்தோம் என்றால் சரிதான். இரண்டு அத்தாட்சிகளையும் ஒரே நேரத்தில் தயார் செய்ய முடியாது என்றால் சரிதான். எந்த அத்தாட்சியை முதலில் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கிளப்பில் உள்ள மதுபானகூடத்திற்கு அனுமதி உள்ளது என்பதை தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். அதேபோல் அனைத்து மதுபான பாட்டில்களையும் உரிய விலை கொடுத்து அரசு அனுமதியோடு தான் வாங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். முறைப்படி இயங்கிகொண்டிருந்த கிளப்பில் நாங்கள் சட்டஅனுமதி பெற்ற நேரத்தில் நாங்கள் சட்டவிரோதமாக சோதனை என்ற பெயரில் தொந்தரவு செய்ததால் அதற்கு கிளப்பில் மணமகிழ் மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் கண்டனம் தெரிவித்ததாலும் மேல் அதிகாரிகளிடம் முறையிட போவதாக சொன்னதாலும் சட்டவிரோதமாக நாங்கள் இந்த வழக்கினை பதிவு செய்துள்ளோம் என்றாலும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை